வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020
FWC

| தரம் :-13 (2020) | தமிழ் I | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

*01.* அ) i) திணை - பாடாண்திணை

ஆண்மகனது ஒழுகலாறு குறித்துப்பாடுவது, கொடை, வீரம் போற்றத்தகுந்த செயல் முதலானவற்றைப் புகழ்ந்து பாடுவது இப்பாடலில் பேகனது கொடை, வீரம் என்பன புகழப்பட்டுள்ளன.

துறை - இயன் மொழி

புரவலரின் தன்மையைப் புகழ்ந்து கூறும் புறத்துறையே இயன்மொழிவாழ்த்து புரவலன் இவ்வாறு கொடுத்தான் எனக் கூறுவதன் மூலம் ஏனையோரும் வழங்குதல் வேண்டும் எனப் பிறர் அறியக்கூறுதல்.

ii) பேகனது கொடை மடத்திறகு கவிஞர் மாரிமழை உவமித்துள்ளார்.

உவமானம் - எல்லா இடங்களிலும் பொழியும் மழை
உவமேயம் - வேறுபாடின்றி வழங்கும் பேகனது கொடை
பொதுத்தன்மை - வரையறையின்றி வழங்குதல்

iii) **கொடை மடம் படுதல்.**

வேண்டியோர் வேண்டாதோர், புதியோர் பழையோர் என வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கும் கொடைத்திறன். பொதுவாக மடம்படுதல் என்பது அறியாமையைக் குறிக்கும். இகழ்ச்சிக்குரியது. ஆயினும் இங்கு புகழ்ச்சிக்குரியதாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**படை மடம் படான் :-**

அறநெறியில் இருந்து விலகாமல் போர்புரியும் திறன், வீரம் அல்லாதவர், புறமுதுகிட்டார், புண்பாட்டார், மூத்தோர் இளையோர் மேல் பேகன் தொடுக்காது எதிர் நின்று பெரும் வீரரிடம் மாத்திரம் போர் செய்யும் வீரம் உடையவன்.

(3x4=12 புள்ளிகள்)

ஆ) i) பரதன் சேனைகளோடு வருவதைக் கண்ட குகன் அவன் இராமன் மேல் போர்தொடுக்க வருகின்றான் எனத் தவறுதலாக நினைத்து தனது படைகளுக்கு தன் நிலைப்பாடு பற்றிக்கூறிய சந்தர்ப்பம்.

ii) இராமன்,

பரதன் இராமனது தம்பி என்பதால், பரதனை எதிர்ப்பது இராமனுக்கு கோபத்தை ஏற்படுத்தும். அதனால் அவன் வெறுத்துக் கோபிக்கக் கூடும் எனல்.

iii) ★ எதிர்த்துப் போரிட முனைந்தால் ஏழு கடல் அளவு பெருட்படை என்றாலும் அழிப்பேன் எனல்.

★ பசுமேய முனைந்தால் எதிரில் கிடந்த சிறுபுல் எனும் படி அனைத்தையும் அழிப்பேன் என உவமையின் மூலம் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தல்.

(4x3=12 புள்ளிகள்)

02. அ) i) **பசுக்களின் செயற்பாடு**

- செந்நிறமுடைய திரண்ட கண்களையுடைய பசுக்கள் சோலைகளில் உள்ள குவளைமலர்களை மேய்தல்.
- முலையில் இருந்து சொரிந்த இனியபால் பசுக்கள் நடந்து சென்றமையால் எழுந்த புழுதியை அடக்குதல்.
- கன்றுகளை நினைந்து குரல் எழுப்பியவாறு இருப்பிடம் நோக்கிச் செல்லுதல்.

**மனிதர்களின் செயற்பாடுகள்.**

- அந்தி பொழுதில் அந்தணர்கள் யாகத்திற்குத் தேவையான செந்தீயை வளர்த்தல்.
- பசுமையான வளையல் அணிந்த இல்லற மகளிர் விளக்கினை ஏற்றல்.
- யாழ் வாசிக்கும் பாணர்கள் மருதப்பண்ணை நரம்புகளை மீட்டி இசைத்தல்.
- முல்லை நில ஆயர்கள் முல்லைப் பண்ணை வேய்ங்குழலில் வாசித்தல்.

ii) ★ **காதல் நிலை**

அன்பைபேடு தாமரையில் மெய்மறந்து விளையாடிக் கொண்டிருந்த போது அதனைத் தாமரை இதழ் குவித்து அடக்கிக் கொண்டது. உடனே அன்னச்சேவல் தாமரை இதழ் சிதையுமாறு கிழித்து தனது பெடையை மீட்டுக் கொண்டு உயர்ந்த தென்னை மரத்தின் மடலில் ஏறி அமர்ந்து கொண்டது.

★ **குறிப்புப்பொருள்**

- அன்னைப் பெடையை தாமரை அடக்குதல் என்பது உதய குமாரன் மீது மணிமேகலை காதல் வயப்பட்டதை உணர்த்தும்.
- அன்னச் சேவல் தனது பெடையை மீட்டுக் கொண்டு உயர்ந்த தென்னை மடலில் ஏறி அமர்தல் என்பது மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மீட்டு உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லுதலைக் குறிக்கும்.

iii) ★ புகார் நகரத்தைப் பெண்ணாக உருவகிப்பதன் மூலம் கிழக்குத்திசையில் மாலையில் தோன்றும் சந்திரனையும் மேற்கில் மறையும் சூரியனையும் வெள்ளி வெண்தோடாகவும் பொற்தோடாகவும் குறிப்பிடல்.

★ இவ்வாறு தோடுகளை அணிந்தமையால் புகார் எனும் பெண்ணின் களங்கமில்லாத அழகிய முகம் பொலிவுடன் விளங்கியது எனல்.

iv) ★ அந்திப்பொழுதினை பெண்ணாக உருவகித்தமை.

★ கதிரவனை அந்திப்பொழுதின் தலைவனாகக் குறிப்பிடல்.

★ போர்க்களத்தில் தனது கணவனை இழந்து வேதனையுடன் உறவினர் வீட்டிற்குச் செல்லும் ஒரு மகள் போல் கதிரவனை வழியனுப்பி வைத்த அளவற்ற வேதனையோடு அந்தி எனும் பெண்ணும் பசலை கொண்ட மேனியை உடையவளாய் புகார் நகரத்தில் தங்கினாள் என அந்திப் பொழுதிற்கு கணவனை இழந்த பெண்ணை உவமையாக்கியமை.

(4x4=16 புள்ளிகள்)

ஆ) i) ஆஸ்தானபீடம் - பிரதான இருப்பிடம்
கோழித்தூக்கம் - வழக்கமாகத் தூங்குவது போல் அல்லாமல் குறைந்த நேரத்தூக்கம்

ii) ★ இரவு வேளையில் மாணவர்கள் பாடங்களைப் படிப்பதற்கு உதவும் சாதனம்.
★ வீட்டுப்பாடங்களை செய்ய உதவுதல்.
★ நாவலின் பிரதான பாத்திரமான தாமோதரமும் நான்கு வருடங்கள் அவ்விளக்கொளியில் கல்வி கற்றமை.
★ ஆலங்கேணிக் கிராமத்திற்கு அறிவொளி பரப்பிய பாடசாலையின் இருளை நீக்குவது எனக் கூறுவதன் மூலம் அறிவொளி பரப்பிட பெற்றோமக்ஸ் விளக்கின் ஒளியும் துணை நிற்றல்.

iii) ★ பகலில் மட்டுமன்றி இரவு வேளைகளிலும் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுதல்.
★ அவ்வாறு ஈடுபடுவதற்கு பாடசாலை பிரதான இடமாக அமைந்து பெரிதும் துணை செய்தல்.
★ பெண்கள் பருவவயதடைந்ததும் கல்வி கற்க முடியாத சூழல்.
★ அதனை மாற்ற வேண்டும் எனும் மனப்பாங்கு தாமோதரம் 'அறிவு கெட்ட ஜன்மங்க்ள' என முணுமுணுப்பதனூடாக வெளிப்படுத்தல்.

iv) ★ எளிமையான உரைநடை
★ பேச்சுவழக்குச் சொற்பயன்பாடு
- சௌந்தரம் பாடசாலைக்கு வாறதில்லையாமே
- அறிவு கெட்ட ஜன்மங்கள்
★ சிறிய வாக்கியங்கள்
★ விபரணத் தன்மை - ஆசிரியர் பற்றியது
வினாக்கொளி பற்றியது

(4x4=16 புள்ளிகள்)

## பகுதி II

*03.* ***அ) குறள் (1, 2, 3, 4)***

- பகைவரைச் சுற்றி வளைத்து முற்றுகை இடுவதற்கு ஏற்ற இடத்தை கண்டறியும் முன்னர் போர் செய்யத் தொடங்க வேண்டாம். பகைவரை இகழவும் வேண்டாம்.
- வலிமையும் பாதுகாவலும் உடைய அரசர்க்கு தாம் பழகிய அரண்சேர்ந்த வசதிகள் வெற்றி முதலான பயன்களைத் தரும்.
- போர் செய்யத்தக்க இடம் அறிந்து போரிட்டால் வலிமை இல்லாதவரும் வெற்றி அடைவர்.
- பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுத்து பகைவரை நெருங்கிப் போர்செய்தால் பகைவர் தோற்பர்.

***ஆ) குறள் (5, 6, 7)***

- வலிமை குறைந்தவராயினும் பகை வெல்ல முடியாத இடத்தில் நின்று போர் செய்தால் வெற்றி அடைவர். வலிமை மிக்கவராயினும் எதிர் நிற்க முடியாத இடத்தில் நின்று போர் செய்தால் தோல்வி அடைவர் என்பதை முதலையின் செயற்பாட்டினூடாகக் கூறல்.
- பகைவர் மேல் போருக்குச் சென்றவர் இடமறிந்து போர் செய்ய வேண்டும் என்பதை பெரிய தேர் கடலில் ஓடாது எனவும் கடலில் செல்லும் நாவாய் நிலத்தில் ஓடாது எனவும் கூறல்.
- தகுந்த இடத்தைத் தெரிவு செய்து, பகைமைக்கு அஞ்சாது மன உறுதியுடன் போர் செய்தால் வேறு துணை வேண்டாம்.

இ) குறள் (8, 9, 10)

- பெரும் படையை உடையவனாயினும் சிறுபடையை உடையவன் அரணோடு தங்கியுள்ள இடத்தை அடைந்தால் தோல்வி அடைவான்.
- அரணும் வல்லமையும் இல்லாதவராக இருந்தாலும் அவர் வாழ்கின்ற இடத்தில் அவரை வெற்றி கொள்ளுதல் மிகவும் அரிதாகும்.
- மிகவும் வலிமையுள்ளவரும் தமக்குப் பொருந்தாத இடத்திற்குச் சென்றால் வலிமை குறைந்தவரால் தோற்கடிக்கப்படுவோர் என்பதை உணர்த்துதல்.

ஈ)
- ஆழமான நீரில் பிறவற்றை வெல்லும் முதலையை அது நீரைவிட்டு நீங்கினால் அனைத்தும் வென்றுவிடும்.
  வலிமை மிகுந்தவராயினும் தாம் எதிர்த்துநிற்க முடியாத இட்டதில் போர் செய்தால் தோல்வி அடைவர்.
- வலிமை வாய்ந்த பெரிய சக்கரங்களை உடைய தேர் கடலில் ஓடாது, அக் கடலில் செல்லும் படகு நிலத்தில் ஓடாது.
  எல்லோரும் அவரவர் இடத்திலேயே வலிமையானவர் இடம் அறிந்து போரிடல் வேண்டும்.
- மிகவும் வலிமை பொருந்திய மதங்கொண்ட யானை சேற்றில் சிக்கிக் கொண்டால் வலிமை குறைந்த நரிகூட அதனைக் கொன்றுவிடும்.
  வலிமையுள்ளவரும் தமக்குப் பொருந்தாத இடத்திற்குச் சென்றால் மிகக் குறைந்த வல்லமையுள்ளவராலும் தோற்கடிக்கப்படுவார்.

(6+4+4+6=20புள்ளிகள்)

04. அ)
- மேகக்கூட்டங்கள் மோதுவதால் உண்டாகும் முழக்கவொலி அதிகரிப்பது போல ஒலி எழுப்பியவாறு யுகமுடிவில் கடல்நீரை வற்றும்படி முகந்துகொள்ள நெருங்குவன போலவும் கொடியோடு படகுகள பாய்மரத்தோடு படர்வன போலவும் நீண்ட தும்பிக்கையை உயர்த்தியவாறு யானைகள் நீந்திச் சென்றன.
- ஆற்றில் மதநீரைச் சொரிந்த யானைகளில் உடற்பகுதி நீரில் மறைந்து தலைகள் மட்டும் வெளியே தோன்றின. அவை கங்கையாகிய பெண்ணின் மார்பினைப் போல் தோன்றின.

ஆ) தேர்கள் பற்றிய வர்ணனை

- தேர்களின் பகுதிகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு குதிரைகளோடு தனித்தனியாக படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டன. இச் செயற்பாடு மரணமடைந்தபின் உயிரினை வெவ்வேறு உடலில் சேர்க்கும் இருவினைச் செயற்பாடு போன்றிலிருந்தது.

குதிரைகள் பற்றிய வர்ணனை

- பால் திரண்டது போன்ற வெண்மையான உடலையும் அச்சம் திரண்டாள் போன்ற மனதையும் காற்றுத் திரண்டாற் போன்ற கால்களையும் உடைய வேகமான நடையுடன் கூடிய கடிவாளம் பூட்டிய எட்டுக் கோடி குதிரைகள் சேல் மீன்கள் திரண்டது போல் படகுகளில் ஏற்றப்பட்டன.

இ)
- வளையள் அணிந்த இளம் பெண்கள் ஒருவர் முன்னே ஒருவர் நெருங்கி அமர்ந்திருந்தனர். யானைகளின் வரிசையில் அவற்றின் தந்தங்கள் குத்துவதுபோல அப்பெண்களின் தனங்களும் நெருங்கி இருந்தன.
- வேகமாகச்செல்லும் மரக்கலங்கள் ஒன்றையொன்று மோதிச்செல்ல பெண்கள் மனங்கலங்கி இருப்பக்கமும் நோக்கினர். அவர்கள் கண்கள் கயல் மீன் கூட்டத்தை ஒத்திருந்தன.
- செந்தாமரை மலரைப்போன்ற முகத்தையும் அமிர்தம் போன்ற சிவந்த வாயையும் தேனினால் நனைந்த கூந்தலை உடைய மின்னலைப் போன்ற பெண்கள்

ஈ) உவமையணி.

- இனமழை மகர நீரை முடிவுற முகப்ப ஊழி இறுதியின் மொய்ப்ப போல்.
- கொடியோடு வங்கம் வேலை கூம்பொடு படர்வது போல்.
- மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினையென.
- சேல்திரண்டு அனைய
- பால் திரண்டு அனயை மெய்ய
- கால் திரண்டு அனைய கால்
- கோடுகள் மிடைந்தவென்ன குவவு கொங்கை
- பூங்குழல் கங்கை நங்கை முலையென
- கண்கள் வெருவிப்பாயும் கயல்குலம் நிகர்த்த
  (இவை போன்ற உவமைகளில் எவையேனும் நான்கு எழுதினால் புள்ளி வழங்கவும்)

(5x4=20 புள்ளிகள்)

05. அ) ★ சரவணமுத்துவின் குழந்தைகள் பற்றிய விபரிப்பின் மூலம் வறுமையை உணர்த்துதல்.
★ நோய் வாய்ப்பட்ட குழந்தை கிழிந்த துணியில் உறங்குதல்.
★ இன்ஸ்பெக்டர் அமரக் கிழிந்த பாயை எடுத்துப்போடுதல்.
★ வார்த்தைகளால் தெரிவாக்க இயலாத தாழ்ந்த சாயலே எங்கும் தென்பட்டது என இன்ஸ்பெக்டரின் பார்வையூடாக உணர்த்தல்.
★ சரவணமுத்து பணத்தைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தாமல் சொந்தத் தேவைக்கும் பயன்படுத்தியமை.

ஆ) ★ கதையின் துணைப்பாத்திரம்
★ தொழில் நேர்மையானவர், அதேநேரம் மனிதாபிமானம் மிக்கவர் என்பதைக் கதைப்போக்கினூடாக எடுத்துரைத்தல்.
★ கதையின் நிறைவுப் பகுதியில் இவரது மனிதாபிமானப் பண்பு வெளிப்படுத்தப்படுவதனூடாக வாசகரது மனதில் நிலை நிறுத்தப்படும் ஒரு பாத்திரமாக விளங்குதல்.

இ) ★ தேன் சிட்டுக்களின் வாழ்க்கையைக் கூறுவதன் மூலம் சுதந்திரமான, வறுமையும் நெருக்கடியுமற்ற இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் காட்டுதல்.
★ பயிர் செய்யப்பட்ட கொடி, சிந்தில் கொடி பற்றிய விபரணத்தினூடாக வாழ்வும் வளர்ச்சியும் இடையூறுகள் அற்றவை அல்ல என்பதை உணர்த்துதல்.

ஈ) ★ எளிமையான மொழிநடை
★ சிறிய வாக்கியங்களைக் கொண்டிருத்தல்
★ விபரண மொழிநடையையும் கையாண்டிருத்தல்.
- குடும்ப வறுமைச்சூழல்
- தோட்டம் பற்றிய விபரிப்பு.

★ பேச்சு வழக்குச் சொற்களைக் கையாளுதல்.
★ உவமை அணிகளைப் பயன்படுத்தியிருத்தல்

(5x4=20 புள்ளிகள்)

06. அ) ★ வான்மிகி இராமாயணத்தில் இலங்கை சமுத்திரத்தின் மத்தியில் உள்ளதென பல இடங்களில் கூறியிருத்தல்.

★ சிலப்பதிகாரத்தில் இந்நாடு இலங்கை என்றே வழங்கப்பட்டுள்ளது.

★ அக்காலத்தில் ஆண்ட மன்னன் கஜபாகு என்பதை 'கடல் சூழிலங்கை கயவாகு' என சிலப்பதிகாரம் கூறுதல்.

★ மஹாவம்சத்தில் இலங்கை என்றே அழைக்கப்படல்.

★ இராமாயனக் கதையில் கூறப்படும் பல சம்பவங்கள் இலங்கைக்குப் பொருந்தியிருத்தல். (உதாரணம்)

★ அகநானூற்று செய்யுள்

★ திருஞானசம்பந்தர் பதிகம்

ஆ) ★ கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் இலங்கையை வென்ற செய்தியைக் கூறும் சாசனம்.

★ திருகோணமலைக் கோட்டை வாயிலில் உள்ள இரட்டை மீன் சின்னம் - வீரபாண்டியனோடு தொடர்புபடுத்தப்படல்.

★ இராமனுடைய சேனை மலைப்பிரதேசத்தில் உள்ள 'அலுத்துவரா' எனும் இடத்திற்கு தேவர்கள் விழாவைப்போல அணிவகுத்துச் சென்றமையை ஹெத்தார கோறளையைப் பற்றிய சாசனம் கூறுகின்றது.

இ) ★ சீதாபிராட்டி சிறை இருந்த இடம் ஹரக்கலா என்ற இடத்தில் உள்ளமை இது 'சீதாதலாவா' என அழைக்கப்படல்.

★ 'பாலுகமா' என்ற இடம் அனுமானால் எரியூட்டப்பட்டது எனவும் இங்கு புல் பூண்டுகள் முளைப்பதில்லை.

★ இராமலிங்கா என்ற இடத்தில் இராவணன் இறுதியாகப்போர் செய்து வீழ்ந்தமை.

★ தூரும் வெலா, பன்சாலா என்ற இடத்தில் சீதாபிராட்டி தன் கற்புநிலையில் இருந்து தவறவில்லை என இராமனுக்கு சத்தியம் செய்ததாகக் கூறல்.

★ இராவண எல்லா என்ற குன்று இராவணன் தன் தலை நகரில் இருந்து இரகசியமாகக் செல்லும் குகை.

ஈ) ★ இராமாயணத்தில் கூறப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மையுள்ளதென பார்ஜிட்டர் கூறினார். தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை என்றார்.

★ மேஜர் போர்பஸ் எழுதிய இலங்கையிற் பதினொரு ஆண்டுகள் எனும் நூலில் கூறியுள்ள கருத்து.

(5x4=20 புள்ளிகள்)

07. அ) ★ கந்தப்பு, மனோகரன் ஆகிய இரு பாத்திரங்களும் நாடகத்தின் முதன்மைப் பாத்திரங்களாக அமைந்துள்ளமை.

★ இருவரது துயரங்களும் அவரவர் நிலையில் முதன்மையானவை என்பது எடுத்துரைக்கப்படும் சம்பவங்களைக் குறிப்பிடுதல்.

★ தன் இழப்பு, துயரத்தை மட்டுமல்லாது பிறரது இழப்பு, துயரத்தையும் எண்ணிச்செயற்படல் வேண்டும் என்பதை படிப்பினையாக வெளிப்படுத்தல்.

★ பாத்திர முரண்பாடு கதையை வளர்த்தெடுக்க உதவியுள்ளமை.

ஆ) ★ நாடகக் கதையை அறிமுகப்படுத்திவைத்தல் - அனைவரும் சிலையாக நிற்க மேடையில் தோன்றி நாடக அறிமுகம் செய்தல்.
★ நாடக நிறைவில் மேடையில் தோன்றுதல்.
★ இருவரது துயரங்கள் குறித்தும் எடுத்துக் கூறல்.
★ அவற்றின் நியாயப்பாடுகளைச் சபைக்கு விளக்குதல்.
★ டொக்டர் கந்தப்புவின் மனநிலையைத் தெளிவுபடுத்த அதிகம் முனைதல்.
★ நாடகத்தை நிறைவு செய்வித்தல்.

இ) ★ எளிமையான பேச்சு வழங்கு
★ யதார்த்தத்தைப் பேணும் வகையில் மக்களது வழக்கத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களைக் கையாளுதல்.
★ காட்சி பற்றிய விபரிப்பில் விபரண ரீதியான நடையைப் பின்பற்றுதல்.
★ உயிரோட்டமான மொழிநடை மூலம் பாத்திரங்களின் உணர்வோட்டங்களை வெளிப்படுத்தல்.
★ சிறிய வாக்கியங்களைக் கொண்டு உரையாடல்களை அமைத்திருத்தல்.

(7+7+6=20 புள்ளிகள்)

08. அ) ★ தீய வினைகள் துன்பத்தை விளைவிக்கும்.
★ சான்றோர்கள் கூறிய அறிவுரையை ஏற்று பாவச் செயலில் இருந்து நீங்காதவர் அதன் பயனாகத் துன்பத்தை அனுபவிப்பர்.
★ துறவிகளுக்கு சில வகையான துன்பங்கள் ஏற்படுவது இல்லை.
★ கற்றறிந்தவர் தமக்கு வரும் வினைப்பயன் குறித்து வருந்தமாட்டார்கள்.
★ இல்லறத்தில் இணைந்து வாழ்ந்தவர்கள் ஊழ்வினைப் பயனுக்கு உள்ளாகியுள்ளனர்.
★ இராமன் சீதையைப் பிரிந்தமை, நளன் தமயந்தியைப் பிரிந்தமை ஊழ்வினைப் பயனாகும்.

ஆ) ★ தாமரை மலர் போன்ற திருவடிகள்
★ அரையும் அதன் மீது அணிகலுள்ள சிவந்த ஆடையும்.
★ அந்தி வண்ண ஆடையும் அதன் மேல் எழில் உந்தியும்.
★ கடல் அலையின் வண்ணம் கொண்ட மேனியில் விளங்கித் தோன்றும் உதர பந்தம்.
★ அழகிய ஆரமணிந்த திருமார்பு.
★ உலகம் ஏழையும் விழுங்கிய கண்டம்.
★ சிவந்த வாய்.
★ செவ்வரி ஓடிய பெரிய கண்கள்.
★ நீல மேனி
★ வெண்ணெய் உண்ட வாய்

இ) ★ தனது கண்ணை மறைத்தவள் கண்ணம்மா என்பதை இனம் காணும் விதம்.
★ கைகளை விலக்கி இறுகத்தழுவிக் கொண்டமை.
★ கடற்கரையில் தான் கண்ட காட்சிகள் அனைத்திலும் கண்ணம்மாவையே கண்டதாகக்கூறல்.
★ அனைத்திலும் கண்ணம்மாவின் முகத்தையன்றி வேறெதனையும் காணவில்லை எனக் கூறல்.
★ நேரிலும் அவளைக் கண்டதாகப் பரவசமடைதல்.

ஈ) ★ சிக்கந்தப் போடியாரின் மகள் ஸரீனாவின் ஆடம்பர ஆடையைக் கண்டு தானும் அணிய முடியவில்லையே என ஏங்குதல், பொறாமை கொள்ளுதல்.

★ சிக்கந்தப் போடியாரின் மனைவி தனது மகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக வாங்கிக் கொடுத்த தரமற்ற ஆடை மூலம் தனது மார்பினை மறைக்க முடியாமல் வருந்துதல்.

★ இரண்டொரு வருடத்தின் பின்னர் அவர்கள் வாங்கித் தரப்போகும் தறிப்புடவையை நினைத்து வருந்துதல்.

★ அதிகாலை முதல் இரவு வரை கடுமையாக வேலை வாங்கப்படுதல்.

★ தனிப்பீங்கான், தேநீர்க் கோப்பை தனிப்பாய் எனக் காட்டப்படும் வேறுபாடு.

★ அனைவரும் உண்டபின் உண்ணும் அவலம்.

★ தானும் ஒரு சிறைக்கைதியா என வருந்துதல்.

★ உண்ணும் போதும் குடிக்கும் போதும் தான் ஒரு இழிந்த சாதியாக எவ்வாறு மாறுகின்றேன் என எண்ணுதல்.

★ ஆண்களுடன் சகஜமாகப் பழக முடியாமை.

உ) கவிஞரின் பண்பு.

★ வாழும் மக்களின் மேன்மைக்காக உணர்ச்சிப் பெருக்கோடு பாடக்கூடியவர்களே கவிஞர்.

★ மனிதர்கள் உய்யும் வகையில் குமுறுகின்ற மனம் படைத்தவனாக விளங்குதல்.

★ உயர்வான சிந்தனைகளால் உந்தப்பட்டு எரிமலை போல உணர்வுகளை வெளிப்படுத்துபவனாக இருத்தல்.

★ தான் பெற்றுள்ள அறிவு, நிலைக்கேற்ப பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தும் திறன் பெற்று இருத்தல்.

★ தன்மானமும் உலகினை காக்கும் ஆற்றலும் கொண்டவனாய் இருத்தல்.

★ காலத்தால் அழியாத கவிதைகளைப் படைப்பவனாக இருத்தல்.

பயனின்றிப் போகக் கூடிய கவிதைகளின் பண்புகள்.

★ மக்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்ளாது நூல்களின் துணையை மட்டுமே நம்பி அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் கவிதைகள்.

★ அரச ஆணைக்கு அஞ்சி அடங்கி ஆக்கப்படும் கவிதைகள்.

★ வெற்றுச் சொல்லலங்காரங்களால் புனையப்பட்ட கவிதைகள்

(10+10=20 புள்ளிகள்)

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :-13 (2020) | தமிழ் - II | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

*01.*

| | | | |
|---|---|---|---|
| *1) 1* | *6) 5* | *11) 1* | *16) 1* |
| *2) 2* | *7) 5* | *12) 3* | *17) 1* |
| *3) 3* | *8) 4* | *13) 3* | *18) 2* |
| *4) 3* | *9) 2* | *14) 4* | *19) 1* |
| *5) 1* | *10) 1* | *15) 3* | *20) 5* |

(01 x 20 = 20 புள்ளிகள்)

*02.* *அ)*
- ஆரியர்கள் இந்தியாவிற்கு வரமுன்னரே தமிழர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர்.
- இந்தியப் பண்பாட்டில் திராவிடப் பண்பாடே அதிகம்
- தமிழ் மொழி தொன்மை பிறமொழித் தொடர்பு தொடர்பாக முழுமையாக ஆராயப்பட வில்லை.
- புராதன திராவிடர்கள் சகாராப் பாலைவனப்பகுதியில் இருந்து பல இடங்களுக்கு பரவினர்.
- கொரியா, ஜப்பான் மொழிகளில் தமிழின் தாக்குரலைக் காணலாம்.

*(13 புள்ளிகள்)*

*ஆ)*

(i) வைதிக சமயத்தின் எழுச்சி
பிராமணியத்தின் செயற்பாடு

(ii) விவசாய வர்க்கத்தின் குறியீடாக கிராமப்புற பிரதி நிதியாகக் குறிப்பிடுகின்றார். அவரது கையில் இருக்கும் உழவாரப்படை மண்வெட்டி போன்ற ஒரு கருவி இது விவசாயத்தின் சின்னம்.

(iii) விவசாய வர்க்கத்தின் மேலோங்குதலையே பக்தி மார்க்கத்தின் ஏற்றம் உணர்த்துகின்றது.

(iv) விவசாயம் சார்ந்த மக்களுக்கு பக்திமார்க்கம் ஒரு கருத்தியலாக விளங்கியது. அதன் நடைமுறைமுக்கு பொருந்தக் கூடிய விடயங்கள், தத்துவங்கள் என்பன பலதரப்பட்ட மக்களுக்கு வடிகாலாக விளங்கின.

(v)
- சிலப்பதிகாரம் சமண சமயம் சார்ந்தது.
- நிலவுடலை அமைப்புக்குள்ளான வணிக வர்க்கமே சமண பௌத்த சமயங்களை ஆதரித்தது என்பதனை விளக்க சிலப்பதிகார நாயகனான கோவலனை வணிக வர்க்கத்தைச் சேர்ந்தவனாகவும் அவனது வாழ்வியலை மூன்று பெரு நகரங்களுடன் தொடர்புபடுத்தியும் கதை அமைக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

(vi) அவை நகர்புறம் சார்ந்த வணிக வர்க்கத்தின் ஆதரவைப் பெற்றவையாக விளங்கியமை.
இச்சமய தத்துவங்கள் நகர்ப்புறத் தன்மை கொண்டவையாக விளங்கியமை.

(02 x 06 =12 புள்ளிகள்)

*03.* கட்டுரையாக்கம்

| | |
|---|---|
| பொருள் - | *12* புள்ளிகள் |
| மொழிநடை | *08* புள்ளிகள் |
| அமைப்பு - | *05* புள்ளிகள் |

*(25 புள்ளிகள்)*

## பகுதி II

04. அ) தொகை நூல் - (எட்டுத் தொகை)

- வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல் தொகை நூல் எனப்பட்டது.
- இவ்வாறு அமைந்தவை எட்டு நூல்கள் என்பதால் அவை எட்டுத் தொகை எனப்பட்டன.
- எடுத்துக்காட்டாக 401 பாடல்களைக் கொண்ட குறுந்தொகை 206 புலவர்களால் பாடப்பட்டுள்ளது.

பாட்டு நூல் (பத்துப்பாட்டு)

- தனியொரு புலவரால் பாடப்பட்ட ஒரு பாடலான நூல் பாட்டு நூல் எனப்பட்டது.
- இவ்வாறு அமைந்தவை பத்து நூல்கள் என்பதால் பத்துப்பாட்டு எனப்பட்டன.
- எடுத்துக்காட்டாக நெடுநல்வாடை எனும் நூலை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியுள்ளார்.

ஆ)
- அகத்திணை, புறத்திணை ஒழுக்கங்கள் இயற்கையின் பெயரால் அமைந்துள்ளன.
- அகத்திணை மரபில் இடம் பெறும் முதலி, கரு, உருப்பொருள்களில் இயற்கைக்கு முதன்மை அளித்தமை.
- உவமை, உள்ளுறை உவமை, இறைச்சி முதலான பல அணிவகைகளில் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளமை.
- நூல்களின் பெயர்கள் இயற்கையின் பெயரால் அமைந்துள்ளன – முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு
- புலவர்கள் தமது பெயரை இயற்கையுடன் தொடர்புபடுத்தியுள்ளமை.
  செம்புலப்பெயல் நீரார், காக்கை பாடினியார்.

இ)
- முதல் - நிலமும் பொழுதும்.
  கரு - குறித்த நிலத்தில் காணப்படும். பறவை, விலங்கு, உணவு, மரம், இசைக்கருவி, நீர்நிலை, தெய்வம் போன்றவை.
  உரி - ஒழுக்கம்.
- அகத்திணை இலக்கியங்களில் எவையேனும் ஒ்னறினை எடுத்துக்காட்டி அவற்றில் மேற்படி முதல், கரு, உரிப்பொருள்கள் அமைந்துள்ளவற்றை விளக்குதல் வேண்டும்.

(3 x 5 = 15 புள்ளிகள்)

05. அ) பரணி - மோகவதைப்பரணி
பாசவதைப் பரணி
அஞ்ஞைவதைப் பரணி

உலா - திருவாரூலா
ஏகம்பநாதருலா
மதுரைச் சொக்கநாத ருலா
திருக்காளத்தி நாத ருலா.

கலம்பம் - காசிக் கலம்பம்
மதுரைக் கலம்பகம்.
திரு ஆமாத்துர்க் கலம்பகம்.
கச்சிக் கலம்பகம்.
தில்லைக் கலம்பகம்.
புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம்.
திருவரங்கக் கலம்பகம்.

பிள்ளைத்தமிழ் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்

நான்மணிமாலை - நால்வர் நான்மணிமாலை
திருவாரூர் நான்மணி மாலை.

முன்மணிக்கோவை - நம்பெருமாள் மும்மணிக்கோவை
பண்டார மும்மணிக்கோவை
சிதம்பர மும்மணிக் கோவை

தூது - சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது

சதகம் - தொண்டை மண்டல சதகம்

அந்தாதி - குளத்தூர் பதிற்றுப்பத்து அந்தாதி
திரு ஏகாம்பர அந்தாதி
கலசை பதிற்றுப்பத்து அந்தாதி
திருமுல்லை வாயில் அந்தாதி
நீரோட்ட யமக அந்தாதி
திருவரங்கத் தந்தாதி

ஆ)
- சாதாரண பொதுமக்களின் விருப்பு வெறுப்புக்களையும் உணர்வுகள் வாழ்வியலைப் பிரதிபலியனவாக அமைதல்.
- சிறந்த இசைப்பண்பு பொருந்தியனவாக அமைதல்.
- சிற்றின்பத்தை ஊட்டும் வகையில் அதீத காமச்சுமை பொருந்தயனவாக அமைவதோடு நகைச்சுவை, சிருங்கார உணர்வு முதலானவற்றையும் பிரதிபலித்தல்.
- நாட்டார் இலக்கியக் கூறுகளை உள்வாங்கியுள்ளமை.
- நாடகத்தன்மை பொருந்தியனவாக அமைதல்.
- எளிமையும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய தன்மையும் பேச்சு வழக்கும் கொண்டிருத்தல்.
- சமூகத்திற்குத் தேவையான நல்லொழுக்கக் கருத்துக்களை வெளிப்படுதல்.
- குறவஞ்சி, பள்ளு முதலிய வடிவங்கள், விருத்தப்பா கட்டளைக் கலித்துறை, சிந்து, கண்ணி முதலிய யாப்புக்கள்.

இ)
- சிலேடைக்கவி, விசைக்கவி, ஆசுகவி முதலானவற்றைப் பாடுவதில் ஆற்றல் மிக்கவர்.
- யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லலங்காரங்களில் வல்லவர்.
- எள்ளல், அங்கதச்சுவை மிக்க பாடல்களைப் பாடியவர்.
- சூழ்நிலைக்கேற்ப பாடும் ஆற்றல் வாய்ந்தவர்.
- சுவைமிக்க தனிச்செய்யுள்களையும் பிரபந்தங்களையும் பாடியவர்.

(03 x 05 = 15 புள்ளிகள்)

06. அ) நிலப்பிரபுத்து இலக்கியங்கள்.
- ஆட்சியாளர்களுக்கு அனுசரணையாக இருந்த, அதிகாரப்பதவி வகித்தவர்களை மையமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன.
- கரவை வேலன் கோவை
    - நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது.
    - வடமராட்சியில் கரவெட்டிப்பிரதேசத்தில் வாழ்ந்த வேலாயுத முதலி பாட்டுடைத் தலைவர்
    - இவரது கொடை, பரம்பரைச் சிறப்புக்கள் புகழப்பட்டுள்ளன.
      ''அள்ளி வழங்கிய மேகம் கரவையில் வேலன்''

- தண்டிகை கனகராயன் பள்ளு
    - ➢ மாவை சின்னக்குட்டிப்புலவரால் பாடப்பட்டுள்ளது.
    - ➢ கனகராய மதலியின் பெருமைகள் பேசப்பட்டுள்ளன.
    - ➢ இவரது சந்ததி, உறவினர்கள் சீரும் சிறப்பும் புகழபட்டுள்ளன.

இவற்றுடன் மருதப்ப குறவஞ்சி, சந்திரசேகரக் குறவஞ்சி ஆகிய நூல்களும் தோன்றியுள்ளன.

ஆ) அகப்பொருள் இலக்கியங்கள்.

- வெருகல் சித்திர வேலாயுதர் காதல்.
    - ➢ தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக் கோன் முதலியாரால் பாடப்பட்டது.
    - ➢ ஈழத்தில் எழுந்த முதல் அகப்பொருள் இலக்கியம்.
    - ➢ சித்திர வேலாயுதர் வீதி உலாச்செல்லும் வேளையில் அவரைக் காணும் தலைவியின் காதல் நிலை கூறப்பட்டுள்ளது.
- பஞ்சவண்ணத்தூது
    - ➢ இணுவில் சின்னத்தம்பிப்புலவரால் பாடப்பட்டது.
    - ➢ உலாச் செல்லும் கைலாய நாதன் மீது சந்திரமோகினி காதல் கொள்வதைப்பாடுகின்றது.
    - ➢ வழமையாக ஒரு பொருளைத் தூது அனுப்பும் முறையில் இருந்து மாறி ஐந்து பொருளைத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது.
- கண்ணியவளை குருநாத சுவாமி கிள்ளை விடுதூது.
    - ➢ வரத பண்டிதர் பாடியுள்ளார்.
    - ➢ கண்ணியவளை எனும் இடத்தில் கோயில் கொண்டிருக்கும் குருநாதசுவாமி மீது தலைவி கிளியைத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது.
- இலக்கால பள்ளு, கோவை இலக்கியங்களிலும்.
  அகப்பொருள் மரபு கூறப்பட்டுள்ளன.

இ) அந்தாதி இலக்கியங்கள்.

- கல்வளை அந்தாதி
    - ➢ நல்லூர் சின்னதம்பிப் புலவர் பாடியுள்ளார்.
    - ➢ கல்வளை எனும் தலத்தில் அமர்ந்துள்ள விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது.
    - ➢ 100 செய்யுட்களில் கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்டுள்ளது.
- மறைசை அந்தாதி
    - ➢ நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் பாடியுள்ளார்.
    - ➢ தமிழகத்தில் வேதாரணியத்தில் அமைந்துள்ள இறைவன் மீது பாடப்பட்டுள்ளது.
- புலியூர் அந்தாதி
    - ➢ மாதகல் மயில்வாகனப்புலவர் பாடியுள்ளார்.
    - ➢ சிதம்பரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவன் மீது பாடப்பட்டுள்ளது.
    - ➢ கடவுள் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக 100 செய்யுள்களில் கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடப்பட்டுள்ளது.

(03 x 05 = 15 புள்ளிகள்)

07. அ) பேராசிரிரியர் வி. செல்வநாயகம்.
- கல்வி கலாசாலை விரிவுரையளர், பல்கலைக்கழகப் பேராசிரியர்.
- தமிழ் இலக்கிய வரலாறு எழுதுவதற்கு ஓர் அடிப்படை வழங்கியமை.
- இலங்கைத் தமிழ் இலக்கிய விமர்சன முன்னோடி
- தமிழ் உரைநடை வரலாறு – சிறந்தநூல்
- கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

ஆ) சி. வி வேலுப்பிள்ளை.
- மலையகத் தரமான இலக்கிய கர்த்தாக்கருள்.
  ஒருவர் - தொழிற் சங்கவாதி, பாராளுமன்ற அங்கத்தவர்.
- தேயிவை தோட்டத்திலே – கவிதைகளின் சிறப்பு
- நாவல்கள் - வாழ்வற்ற வாழ்வு, வீடற்றவன், இனிப்படமாட்டேன், பார்வதி, எல்லைப்புறம்.
- உரைநடைச்சித்திரங்கள்.

இ) உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்.
- தொல்காப்பியம், இராமாயணம், பாரதம் முதலிய இலக்கண இலக்கியத் துறைகளில் பாண்டித்தியம்.
- தமிழகத்தில் இராமநாதபுரம் விசயரகுநாதபாஸ்கரசேதிபதியால் கௌரவிக்கப்பட்டமை.
- சேதுபதி மீது பிரபந்தங்களும் தனிச் செய்யுட்களும் பாடியமை.
- அறுபதுக்கு மேற்பட்ட பிரபந்தங்கள் பாடியமை.
- ஆறுமுக நாவலரால் சிறப்பிக்கப்பட்டவர்.

ஈ) கவிஞர் அப்துல் காதர் லெப்வை.
- கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் கவிஞர்.
- ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- மரபு – நவீன காலக் கவிதை மரபுக்கு இடைப்பட்டவர்.
- கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வியலை கவிதைகளில் எடுத்துக் காட்டியவர்.
  செய்னமபு நாச்சியார் மான்மியம்
  பாத்திமா சரிதை
- தத்துவ நோக்கிலாக கவிதைகளைப் படைத்தவர்.
  தஸ்தகிர் சதகம், றூபையாத்
  இறதுல் சதகம், நான்.
- மொழி பெயர்ப்புக் கவிதைகள்.

(7 ½ x 2 = 15 புள்ளிகள்)

08. அ) (i) செல்லம்மா மாதாந்தம் நிவாரணம் பெற்றாள் என்பது மாதாந்தம் பிள்ளை பெற்றாள் எனும் பொருள் மயக்கத்தை ஏற்படுத்துகின்றது.

(ii) கால வழு காணப்படுகின்றது.
நாளை வருகிறார் என்பது நாளை வருவார் என வரவேண்டும்.
திருத்திய வாக்கியம் - பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைத் திறந்து வைப்பதற்காக கல்வி அமைச்சர் நாளை வருவார் என்னும் தகவலை அதிபர் காலைப்பிரார்த்தனை நிறைவடைந்ததும் அறிவித்தார்.

(iii) குயில் இனிமையாகப் பாடியது.
இதில் உள்ள பாடியது என்பது இறந்த கால வினைமுற்று

பாடியது பறந்து போனது
இதில் உள்ள பாடியது என்பது வினையாலனையும் பெயர்.

(iv) எச்சத்தொடர் - ‘அம்மா வர’
செய்ய எச்சத் தொடர்.

(v) இடது பக்கம் - இடப்பக்கம்.
சில அறிஞர்கள் - அறிஞர்கள் சிலர்
முன்னூறு ரூபாய் - முந்நூறு ரூபாய்.
நாட்கள் - நாள்கள்.

*(2 x 5 = 10 புள்ளிகள்)*

ஆ) (i) பொதுவினை

செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், செயப்படுபொருள் குன்றாத வினையாகவும் வரும் வினை பொதுவிணை எனலாம்.

எடுத்துக்காட்டு – எரி, நணை, முறி, ஓடி

மரத்தை எரித்தேன் - செயப்படுபொருள் குன்றா வினை

வீடு எரிந்தது – செயப்படுபொருள் குன்றிய வினை

(ii) பகுதி :-

- பகுபதம் ஒன்றின் அடிச் சொல் பகுதி எனப்படும்.
- அடிச்சொல்லுடன் இணைக்கப்படும் ஒவ்வொரு கூறும் ஒட்டு எனப்படும்.
- இது இருவகைப்படும்.
  - ➢ தனியகுதி
  - ➢ கூட்டுப்பகுதி

தனப்பகுதி - சொல் ஒன்றின் பகுதி பகாப்பதமாக அமைந்தால் அது தனிப்பகுதி எனப்படும்.

வந்தான் - வா
போனாள் - போ
பூக்கள் - பூ

கூட்டுப்பகுதி – சொல் ஒன்றின் பகுதி பகுபதமாக அமைந்தால் அது கூட்டுப்பகுதி எனப்படும்.

போயிருந்தான் - போயிரு
பூனைக்குட்டிகள் - பூனைக்குட்டி

(iii) ஆக்கப் பெயரடை

- பெயர்ச்சொல் ஆன, உள்ள பெயரடை விகுதிகளைப் பெற்று வரும் போது ஆக்கப்பெயரடை எனப்படும்.

இதன் அமைப்பினை பின்வரும் இருவகையில் நோக்கலாம்.

➢ பெயர் + ஆன

புதுமை + ஆன → புதுமையான

வேகம் + ஆன → வேகமான

➢ பெயர் + உள்ள

புதுமை + உள்ள → புதுமையுள்ள

வேகம் + உள்ள → வேகமுள்ள

*(05 புள்ளிகள்)*

*(10 + 05 = 15 புள்ளிகள்)*